**செ. கு. எண்**:423 **நாள்**: 26.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.11.2012

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலிருந்து பழனி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து 24.11.2012 அன்று காடம்பாறை மூன்றாவது கொண்டை ஊசி வளைவு அருகே, தடுப்பு சுவரின் மீது மோதி, மலையிலிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில், பேருந்தில் பயணம் செய்த வால்பாறை வட்டம், இஞ்சிப்பாறை கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மனைவி சரோஜினி, திரு. காளிமுத்து என்பவரின் மகன் சந்திரகாந்த், ஊசிமலை பகுதியைச் சேர்ந்த திரு. வீரப்பன் என்பவரின் மகன் நாகராஜ், திரு. ராமசாமி என்பவரின் மகன் பன்னீர்செல்வம், பெரிய கல்லார் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமரன் என்பவரின் மகன் சந்திரபோஸ், திரு. ஆனந்தகுமார் என்பவரின் மகன் சதீஷ் மற்றும் வெள்ளைமலை பகுதியைச் சேர்ந்த திரு. கோனப்பன் என்பவரின் மகன் வெள்ளைச்சாமி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் 57 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**